**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.107/2016**

**DEPOSITION OF WITNESS FOR PW.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | KUMARASAMY | **Caste** | |
| **Father / Husband Name** | **VENKATACHALAM** | **Occupation** | **FARMER** |
| **Village** | **MOONGAPATTU, METTUKALAM** | **Religion** | **HINDU** |
| **Taluk** | **GUDIYATHAM** | **Age** | **56** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.10.2022.**

**முதல் விசாரணை**

**1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 01.05.2015 அன்று ஆஜர் எதிரி சித்திக் பாஷா என்பவருக்கு ரூபாய்.30,000/— கடன் கொடுத்தேன். கடந்த 17.05.2015 அன்று நான் அவரின் கடைக்கு சென்ற பணத்தை திருப்பி கொடுக்குமாறு நான் இருசக்கர வாகனத்தில் இருந்தவாறு அவரிடம் கேட்டேன். அவர் நான் வண்டியில் அமர்ந்திருந்தபோதே என்னை எட்டி உதைத்து கீழே தள்ளிவிட்டார். பின்பு பாட்டிலால் எனது தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்பு தேவிடியாப்பையா என்றும் அசிங்கமாகவும் திட்டினார்.**

**2. பின்பு அடிப்பட்ட நான் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் சிகிச்சையிலிருக்கும்போது போலீசார் அன்றைய தினமே என்னிடம் வந்து சம்பவத்தை பற்றி விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

**1. எதிரி எனக்கு பழக்கமான நபர் ஆவார். நான் அவரது கடைக்கு சென்றுவரும்போது எனக்கு பழக்கமானார். நான் பைனான்சில் வேலை செய்து கொண்டிருந்தேன். எதிரி என்னிடம் பணம் கேட்டார். நான் எதிரிக்கு ரூபாய் 30,000/— பணம் கொடுத்தேன்.**

**2. நான் எதிரிக்கு ரூ.100/—க்கு ரூபாய் 2 வட்டி வீதம் கடனாக கொடுத்தேன். நான் எதிரிக்கு கடன் கொடுத்தற்கு பாண்டு எழுதி வாங்கி வைத்துள்ளேன். அந்த பாண்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.**

**3. எனக்கு உச்சந்தலையில் காயம் ஏற்பட்டது. எதிரி என்னை ஜீஸ் பாட்டிலால் அடித்தார். காலிபாட்டிலால் என்னை ஓங்கி அடித்தார்.**

4. நான் பின்பு குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னை அங்கிருந்த ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் அழைத்துச்சென்று மருத்துவமனையில் சேர்த்தார்.

5. சம்பவ இடத்திற்கு அருகில் மருத்துவமனை உள்ளது. சம்பவம் சுமார் பகல் 12.00 மணியளவில் நடைபெற்றது.

6. நான் எதிரிக்கு கடன் கொடுத்தது பொய் என்றாலும், எனக்கு வேறு சம்பவத்தில் அடிப்பட்டது என்றாலும் சரியல்ல.

7. நான் காவல்நிலையத்திற்கு நேராக செல்லவில்லை என்றாலும், மருத்துவமனைக்குத்தான் நேரடியாக சென்றேன் என்றாலும் சரியல்ல. எனக்கு குடிப்பழக்கம் இல்லை. சம்பவத்தின்போது நான் மட்டும்தான் இருந்தேன்.

8. நான் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் அந்த பாண்டை இந்த நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

9. தலையில் பாட்டிலால் ஓங்கி அடித்திருந்தால் தையல் போட்டிருப்பார்கள் என்றால் சரிதான். எனக்கு தலையில் தையல் போட்டார்கள்.

10. சம்பவம் குடியாத்தம் கெங்கையம்மன் திருவிழாவிற்கு மறுநாள் நடைபெற்றது. சம்பவத்தன்று திருவிழா நடைபெற்றது என்றாலும் மக்கள் கூட்டம் இருந்தது என்றாலும் நான் வேறு எங்கோ நடைபெற்ற சம்பவத்தில் எதிரியை குறிப்பிட்டு புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. சம்பவம் நடந்தபோது ஒரு 10 பேர் அளவில் போக்குவரத்துமாக இருந்தார்கள்.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.107/2016**

**DEPOSITION OF WITNESS FOR PW.2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | SARATHY | **Caste** | |
| **Father / Husband Name** | **VELAYUTHAM** | **Occupation** | AUTO DRIVER |
| **Village** | **MOONGAPATTU VILLAGE, AGRAVARAM POST** | **Religion** | **HINDU** |
| **Taluk** | **GUDIYATHAM** | **Age** | **37** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.10.2022.**

**முதல் விசாரணை**

**1. நான் மூங்கபட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக வேலை செய்கிறேன். 17.05.2015 அன்று மதியம் 03.00 மணிக்கு கோபாலபுரம் மசூதி அருகில் அப்போது அந்த வழியாக நான் வந்து கொண்டிருந்தபோது போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். குமாரசாமி என்பவரை அடித்தது தொடர்பாக போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள்.**

**2. சம்பவம் நடந்தது உண்மையா என்று கேட்டதற்கு நான் ஆமாம் என்று சொன்னேன். அந்த இடத்தில் நானும் சௌந்தரராஜனும் இருந்தோம். அந்த இடத்தில் மாதிரிவரைபடம் வரைந்த பின்னர் என்னிடமும் சௌந்திரராஜனிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரித்தார்கள்.**

## எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

**1. சம்பவம் 2015ம் வருடம் நடைபெற்றது. அப்போது நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வந்தேன். தற்போதும் ஆட்டோ ஓட்டும் தொழில்தான் செய்து வருகிறேன்.**

**2. போலீசார் மதியம் 03.00 மணியளவில் வரைபடம் வரைந்தார்கள். அந்த போலீசார் பெயர் எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது பகல் 12.00 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்தேனா என்றால் இல்லை.**

**3. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. சண்டை நடந்த விவரம் எனக்கு தெரியாது. ஆனால் போலீசார் கூறி எனக்கு தெரியும். போலீசார் கேட்டுக்கொண்டதின்பேரில் கையொப்பம் செய்தேன்.**